





‘பராசக்தி’ போன்ற படங்களின் வசனங்கள் மூலம் முத்தமிழறிஞர் கலைஞர்தான் தமிழ்த் துறையின் போக்கையே முற்றிலுமாக மாற்றியவர்!

# தமிழ்நாட்டின் திரைத்துறைக்கு ரூ. 4 ஆயிரம் கோடி வரவு! 1000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு!

# ‘ஜியோ ஹாட் ஸ்டார்’ முன்னெடுப்பை மனமார வரவேற்கிறேன்!

## தமிழ்நாடு அரசு – ஜியோ ஹாட் ஸ்டார் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்த விழாவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

சென்னை,டிச.10–

**சென்னை ஐ.டி.சி. கிராண்ட் சோழாவில் ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட் நிகழ்ச்சிநேற்று நடைபெற்றது. இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு இந்த முன்னெடுப்பைத் தொடங்கிவைத்து வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம் வருமாறு :–**

படைப்பூக்கத்துடன் மலர்ந்துகொண்டிருக்கும் இந்தத் தமிழ் மண்ணுக்கு உங்களையெல்லாம் அன்போடு வரவேற்கிறேன். இந்த மிக முக்கியமான ‘ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட்’ முன்னெடுப்பைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த அற்புதமான திட்டத்தை சென்னையில் தொடங்கத் தேர்ந்தெடுத்த ஜியோ ஹாட்ஸ்டாருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தென்னிந்தியக் கலைஞர்கள்

சென்னை, தென்னிந்திய திரைத்துறையின் படைப்புத் தலைநகரமாக விளங்கியது. தமிழ்ப் படங்கள் மட்டுமல்ல - தெலுங்கு, மலயாளம், கன்னடப் படங்களும் இங்குதான் தயாரிக்கப்பட்டன. இன்று, இந்த அரங்கத்தில் தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த ஏராளமான கலைஞர்கள் ஒரே இடத்தில் கூடியிருப்பதைப் பார்ப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இது சாதாரண நிகழ்ச்சி இல்லை. தென்னிந்தியப் படைப்பாளிகளின், நமது பண்பாட்டின், எதிர்காலத் திறமைகளின் கொண்டாட்டமாகும். தமிழ்நாட்டின் கலை, இலக்கிய வரலாறு பல ஆயிரம் ஆண்டுகள் வளமைக்கு உரித்தானது. ஆனால், நமக்குப் பெருமை தருவது அதன் பழமை மட்டுமல்ல - இன்றும் அது உயிர்ப்புடன் இருப்பதுதான்.

### திராவிட இயக்கம்

தமிழ்நாட்டின் மற்றும் தென்னிந்திய மாநிலங்களின் சமூகஅரசியல் நிலப்பரப்பை வடிவமைப்பதில் கலையும் இலக்கியமும் செலுத்திய தாக்கத்தை நாம் அனைவரும் அறிவோம். அது குறித்துப் பேசும்போது, திராவிட இயக்கம் பற்றிப் பேசாமல் இருக்க முடியாது. அந்த இயக்கம்தான் இன்றைக்கும் நமது அரசின் உந்துசக்தியாக விளங்குகிறது.

இந்தியாவிலேயே முதலில் கலை வழங்கும் விடுதலை உணர்வையும், திரைப்படம் மூலம் அறிவூட்டவும், சமூகத்தை முன்னேற்றப் பாதையில் செலுத்தும் தன்மையும் கொண்ட பொழுதுபோக்கு சாதனம் என்பதை நிரூபித்த இயக்கம் நமது திராவிட இயக்கம்தான்.

### கதைகளால் சமூக மாற்றம்

திரையை வகுப்பறையாக மாற்றினோம். நாடகத்தை உரையாடலாக மாற்றினோம். கதைகளைச் சமூக மாற்றமாக மாற்றினோம். பேரறிஞர் அண்ணா அவர்களும் டாக்டர் கலைஞர் அவர்களும், தமிழ்த் திரைப்படத்துறையின் முன்னோடிகளாக விளங்கி அதன் போக்கை தீர்மானித்தார்கள். கலைஞரின் கூர்மையான வசனங்கள் பார்வையாளர்களை மகிழ்விப்பதோடு நின்றுவிடவில்லை - திரைக்கு அப்பாலும் சிந்திக்கத் தூண்டின. ‘பராசக்தி’ போன்ற படங்களின் வசனங்கள் மூலம் கலைஞர்தான் தமிழ்த் திரைத்துறையின் போக்கையே முற்றிலுமாக மாற்றியவர் என்று பெருமையோடு சொல்வேன். அவரது பாணி தனித்துவமானது.

இன்றைக்கும் புதிய வசனகர்த்தாக்களுக்கு அவரது வசனங்கள் உத்வேகம் அளிக்கின்றன. திரைத்துறையில் தென்னிந்தியாவின் பங்களிப்பு இந்தியாவுக்கே படைப்பூக்க அளவுகோலை நிர்ணயித்திருக்கிறது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். இன்று ஓடிடி தளங்கள் தென்னிந்தியக் கலைஞர்களுக்கும் கதை சொல்லிகளுக்கும் புதிய வெளியாக மாறியிருக்கின்றன.

### ஓ.டி.டி தளங்கள் ‘கன்டென்ட்’ தான் கிங்!

இன்று ஓ.டி.டி தளங்கள் திரைப்படத்தை ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் கொண்டு சேர்த்திருக்கின்றன. ஏனெனில், கடந்த காலங்களில் வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே இருந்தன.

இன்றைய சூழலில் மதுரையைச் சேர்ந்த 22 வயது இயக்குநர், சேலத்தைச் சேர்ந்த இளம் எழுத்தாளர், திருநெல்வேலி அல்லது ஈரோட்டைச் சேர்ந்த படைப்பாளி - இவர்கள் ஒரு கதையை பதிவேற்றினாலே உலகெங்கும் பார்வையாளர்கள் கிடைக்கிறார்கள். தடைகளும் இல்லை, தடை செய்பவர்களும் இல்லை. எல்லோரும் சொல்கிற ஒரே விஷயம், ‘கன்டென்ட் தான் கிங்’. கன்டென்ட் நன்றாக இருந்தால் அது மக்களால் கொண்டாடப்படும்.மொழியையும் இனத்தையும் தாண்டி, நல்ல கன்டென்ட்டுக்கு எல்லா இடங்களிலும் வரவேற்பு உண்டு.

கமல் சார் - மாபெரும் உதாரணம்!

இதற்கு ஏராளமான உதாரணங்களைச் சொல்லலாம்.இன்றைய சூழலில், புதிய தொழில்நுட்பங்களை கலைஞர்கள் கற்றுக் கொள்வது மிக மிக அவசியமாகும். எதைக் கற்க வேண்டும், எப்படிக் கற்க வேண்டும், அதை எப்படி கலையாகக் கொண்டுவர வேண்டும் என்பதற்கு நம்முடன் அமர்ந்துள்ள கலைஞானி கமல் சார் அவர்கள், நம் அத்தனை பேருக்கும் ஒரு மாபெரும் உதாரணம் - உத்வேகம்.

இன்றைக்கும் கமல் சார் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்கிறார், வளர்ந்து கொண்டே இருக்கிறார்- ஒவ்வொரு கலைஞருக்கும் உண்மையான எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார். திரைத்துறையின் ஒவ்வொரு புதிய அம்சத்தையும் முதலில் ஏற்று, பரிசோதித்துப் பார்ப்பவர் எப்போதும் கமல் சார்தான்.

### பெருமையோடு நினைவு கூர்கிறேன்!

இன்றைக்கு ஓடிடி தளங்கள் குறித்தும் தொழில்நுட்பப் புதுமை பற்றியும் பேசும்போது, 2012லேயே தன் படத்தை நேரடியாக வெளியிட முயன்ற முன்னோடி முயற்சி நமது கமல் சாருடையது என்பதை தமிழ்நாடு பெருமையோடு நினைவுகூர்கிறேன்.

ஓடிடி தளங்கள் திரைத்துறையை மாற்றீடு செய்யவில்லை. மாறாக, அது திரைப்பட உலகை விரிவாக்குகிறது. புதிய வகை கதைகள், வடிவங்கள், பாணிகள், குரல்களுக்கு இடம் உருவாக்குகிறது. எனவே, தமிழ்நாட்டின் மற்றும் தென்னிந்தியப் படைப்புச் சூழலுக்கு ஜியோ ஹாட்ஸ்டாரின் இந்த முன்னெடுப்பை மனமார வரவேற்கிறேன்.

### கண்டறியும் திட்டங்கள்

இந்தக் கூட்டிணைவின்மூலம் இளம் படைப்பாளிகளுக்குப் பயிற்சியும் இன்டர்ன்ஷிப்பும் அதன்மூலம் உலகச் சூழலுக்கு ஏற்ற திறமைகளை வளர்த்துக்கொள்ளலும் நடைபெறும் என எதிர்நோக்குகிறோம்.






### திறமையாளர்களைக் கண்டறியும் திட்டங்கள்!

மேலும், இதன்மூலம் திரைப்பட விழாக்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு, உயர்தர தமிழ் மற்றும் பிற மொழிப் படைப்புகளின் பரவலாக்கம், ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையாளர்களைக் கண்டறியும் திட்டங்கள் ஆகியவற்றையும் எதிர்நோக்குகிறோம்.

கலைஞானி கமல் சாருடன் இணைந்து உருவாக்கப்படவிருக்கும் கிரியேட்டிவ் லேப்ஸ், இந்தத் திட்டத்தை இன்னும் பரவலாக்கி வெற்றி பெறச் செய்யும். வலுவான படைப்புப் பொருளாதாரத்தை உருவாக்குவதில் நமது திராவிட மாடல் அரசு உறுதியாக உள்ளது. சென்னையில் உலகத்தரம் வாய்ந்த ஃபில்ம் சிட்டியை அமைப்பதாகவும் நமது அரசு அறிவித்துள்ளது. இந்த உட்கட்டமைப்புடன் இணைந்து, ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட் திட்டம் அபரிமிதமான பலன்களைத் தரும் என உறுதியாக நம்புகிறேன்.

ஜியோ ஹாட்ஸ்டார் அடுத்த ஐந்து ஆண்டுகளில், நான்கு தென் மாநிலங்களிலும் 12,000 கோடி ரூபாய் முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டின் திரைத் துறைக்கு 4,000 கோடி ரூபாய் கிடைக்கவுள்ளது. இதன் மூலம் ஆயிரம் நேரடி வேலைகளும், 15,000 மறைமுக வேலைவாய்ப்புகளும் உருவாகும். மிக முக்கியமாக, இதன் பயனாளிகள் நமது கலைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், தயாரிப்புக் குழுக்கள், அதற்கும் மேலாக உள்ளடக்கப் படைப்பாளர்கள்தான்.

### ஜியோ ஹாட் ஸ்டார் திட்டம்! பெருமகிழ்வு கொள்கிறேன்!

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நமது திராவிட மாடல் அரசு, இந்தத் திட்டத்துக்கு முழு ஆதரவு அளிக்கும் என உறுதியளிக்கிறேன். தமிழ்நாட்டின் கலாச்சாரம் மற்றும் பண்பாட்டில் பெருமிதம் கொண்டு, ‘ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட்’ திட்டத்தை இத்துடன் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கி வைப்பதில் பெருமகிழ்வு கொள்கிறேன். ஜியோ ஹாட்ஸ்டார் சவுத் அன்பவுண்ட் திட்டம் மாபெரும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். நன்றி, வணக்கம்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் எம். பி. சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர், நடிகர் கமல்ஹாசன், ஜியோ ஸ்டார், என்டர்டெயின்மென்ட் சி.இ.ஓ. கெவின் வாஸ் சுஷாந்த் ஸ்ரீராம், கிருஷ்ணன் குட்டி,தென் கிளஸ்டர், திரைப்படக் கலைஞர்கள், திரைப்பட இயக்குநர்கள், படைப்பாளிகள், எழுத்தாளர்கள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.